தத்துவவிவேசினி

சென்னைலௌகிகசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. VI.—No. 9.] MADRAS:—SUNDAY FEBRUARY, 27, 287. A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

வேகத்துவம்.
இலௌகிகப்பொறுப்பு.
இந்துசமயசாரவிளக்கம்.
சந்தியாவந்தனம்.
கடிதங்கள்.
வர்த்தமானசங்கிரகம்.

"இந்துசுவக்கியானசங்கம்" என்னும்பெயர், இச்சங்கத்தில் இப்போது யூரோஷியர் முதலானவர்கள் சேர்ந்திருப்பதால், "மதிராஸ் ஸிக்யுலர் சோசைட்டி" என்னும் இங்கிலீஷ் பெயருக்கிணங்க, "சென்னை லௌகிக சங்கம்" என மாற்றப்பட்டது.

வேகத்துவம்.

இத்தலைப்பெயர் சூட்டி வேகத்துவ இலக்கணங்களையும் வேகத்துவ பிரகிர்தி நியாயப்பிரமாணங்களையும் இப்பத்திரிகையின்மூலமாய் வியவகரிப்பாம். சாஸ்திரவிஷயங்களை எழுதுங்கால் முக்கியமாகிய பதங்களுக்கு முன்னர் பொருள்கூறிப் பின்னர் உபயோகித்தல்வேண்டுமாதலால் அங்ஙனமே ஆங்காங்கு பிரயோகிக்கப்படும் பிரதானமொழிகளுக்கு ஈங்கு பொருளைகூறப்படும்.

வேகத்துவம் என்பது இடம்மாறும்தன்மை என பொருள்படும். வேகத்துவம் என்பது ஒரு வஸ்துவல்ல; அது ஒருவகைத்தொழிலின்பெயர். தொழிலென்னுங்கால் தொழிலையுடைய வஸ்து ஒன்று இருத்தல் வேண்டுமென வெளிப்படும்.

வஸ்துக்களின் இடம் மாறுந்தன்மை அல்லது வேகத்துவம் மூவகைப்படும். அவை, சமவேகத்துவம், விநுத்திவேகத்துவம்,க்ஷயவேகத்துவம்,எனப் பெயர் பெறும்.

சமவேகத்துவம் என்பது தொடர்ச்சியான சமகாலங்களில் சம இடஞ்செலலும் தன்மை. எங்ஙனமெனின், ஒரு புகைவண்டியானது முதல், ஒருமணிகாலத்தில் ௨0 - மைமிலும், இரண்டாவது ஒருமணிகாலத்தில் ௨0 - மையிலும் மூன்றுவது ஒருமணிகாலத்தில் ௨0 - மையிலும் சென்று, இவ்வாறே தொடர்ச்சியான சமகாலங்கள்தோறும் சம இடஞ்சென்றால், அவ்வண்டியின் வேகத்துவத்திற்கு சமவேகத்துவமென்று பெயர்.

விருத்திவேகத்துவம் என்பது தொடர்ச்சியான சமகாலங்கள்தோறும் செல்லும் இடம் மிகுதிபட்டுக்கொண்டே யிருக்குந்தன்மை. அல்லது மாத்திரைப்பொழுதிற்கு மாத்திரைப்பொழுது வேகத்துவம் படிப்படிஅதிகரித்தல்,எங்ஙனமெனின், ஒரு புகைவண்டியானது முதல் ஒரு மணிகாலத்தில் ௨0 - மையிலும், இரண்டாவது ஒரு மணிகாலத்தில் ௩0 - மையிலும், மூன்றுவது ஒருமணிகாலத்தில் ௪0 - மையிலுஞ் சென்று, இவ்வாறே தொடர்ச்சியான சமகாலங்கள்தோறும் செல்லும் இடம் அதிகப்பட்டுக்கொண்டிருப்பின், அவ்வண்டியின் வேகத்துவத்திற்கு விருத்திவேகத்துவமென்று பெயர்.

க்ஷயவேகத்துவம் என்பது தொடர்ச்சியான சமகாலங்கள்தோறும் செல்லும் இடம் குறைந்துகொண்டே யிருக்குந்தன்மை. எங்ஙனமெனின், ஒரு புகைவண்டியானது முதல் ஒருமணிகாலத்தில் ௩0 - மையிலும், இரண்டாவது ஒருமணிகாலத்தில் ௨௫ - மயிலும், மூன்றுவது ஒருமணிகாலத்தில் ௨0 - மையிலும் சென்று, இவ்வாறே தொடர்ச்சியான சமகாலங்கள்தோறும் செல்லும் இடம் குறைந்துகொண்டேயிருந்தால், அவ்வேகத்துவத்திற்கு க்ஷயவேகத்துவமென்று பெயர்.

ஒருவஸ்துவின் வேகத்துவத்தை யறிதல் இடபேதத்தாலும், இடம் மாறும் தீவரத்தாலும், காலபேதத்தாலு மாதலால், ஈண்டு இடமென்பதனையும், வேகமென்பதனையும், காலமென்டதனையும்பற்றி சற்றே வியவகரிப்பாம். இ-மு.

(இன்னும்வரும்.)

இலௌகிகப்பொறுப்பு.

வைதிகிகள் தாம்தாம் இகத்தில் புரிந்துவருங் கருமங்களுக்குப் பரத்தில் தம்முதல்வனுக்குத்தாமே உத்திரவளித்தல்வேண்டும் என்று உரையாடிவருவது உள்ளம் கவர்ந்தோங்கிய உரையோ கள்ளம் பரந்தோங்கிய உரையோ வென்று உற்றுநோக்குவாம். இகமும் பரமும் எதிர்முகத்துறைகள் என்பதனை எல்லோரும் அங்கீகரிப்பதனோடு அவ்விருதுறைகளையும் ஏககாலத்தில் கண்டுநின்றவர் எவருமேயில்லை என்று எல்லோருமே ஒப்புக்கொள்ளுவர். இகமாகிய துறையில் வசிக்கும் வைதிகிகள் பரமாகிய மற்றோர் துறையும் உளதென்று (தாமுங் காணமல் கண்டோர் சொல்லவுங் கேட்காமல்) தாமே தமக்குள் மனோசிருட்டி செய்துகொண்டு நடிப்பது தக்கோர் செய்கையாமோ! இவ் வைதிகிகள் நடிப்பாளரல்லாதுவிடின் குற்றமென்பது உலகத்தில் முற்றுமே யில்லாதிருத்தல்வேண்டும். ஒருக்காலிருப்பினும் அக்குற்றம் பரக்கியானமில்லாத இலௌகிகிகள் பாலதாகவே இருத்தல்வேண்டும். நமது அனுபவபூர்வமாய் நோக்குமிடத்து குற்றம் புரிபவரெல்லாரும் பரக்கியானமில்லா இலௌகிகிகளுமல்லர். குற்றம் புரியாரெல்லாரும் பரக்கியானமுள்ள வைதிகிகளுமல்லர். ஆகையால் மனோசிருட்டியாகிய பரக்கியானம் மனிதரைக் குற்றம்புரிய வொட்டாமல் தடுக்கவல்லதன்று. பரத்தில் நம்பிக்கையுள்ளாரும் நம்பிக்கையில்லாரும் ஆகிய இருதிறவரும் யாதொரு பேதமுமில்லாமல் குற்றம்புரிந்து வருகின்றமையால், நீதியை நிலைநிறுத்தற்குக் கடவுள நம்பிக்கை காரணமன்று. நீதியை நிலைநிறுத்தற்குக் கடவுள் நம்பிக்கை காரணமல்லாதபோது, மற்று யாதுபயனைக் கருதியோ மனோசிருட்டி செய்துகொள்வது? வைதிகிகள் தாம்தாம் புரிந்துவரும் நன்மை தீமைகளுக்குத் தாமே உத்தரவளித்தலவேண்டும் என்பதனைச் சத்தியமாகவே நம்பினவர்களாயின், அவர்களுள்ள ஊரிலுங் கொலைகளவாதி குற்றங்கள் குடிபுகாவே. குடிபுகுந்திருக்கின்றமையான் அவர்கள் பகரும் வாசகம் நடிப்பே. ஆயினமையின் உண்மையாக நோக்குமிடத்து வைதிகப்பொறுப்பு நடிப்பே. ஆனல் இவ்வுலக அதிகாரிகளுக்கும் தம்மோடொத்தவர்களுக்கும் தத்தம் மனச்சாக்ஷிக்கும், இலௌகிகிகள் பொறுப்பாகின்றமையால், அன்னோர் வாக்கியம் நெஞ்சொளித்து நிகழ்வதன்று.

இந்துசமயசாரவிளக்கம்.

(சிலநூல்களிலிருந்தெழுதியசங்கிரகம்.)

சதுர்வேதங்களுக்கடுத்தவிவரங்கள்.

சதுர்வேதமென்பது நாலுவேதங்கள் என்றர்த்தமாம். அந்நாலுவேதங்கள் ஏதெனில் இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என்பவையாம்.

இந்துமதஸ்தருடைய பிரபந்தங்களிலெழுதியிருக்கிறதைப்பார்த்தால் இந்த வேதாகமங்கள் தெய்வத்தால் மனுஷர்களுக்கு எழுதிக்கொடுக்கப்பட்டதுமலல, கட

வுள் சொல்லவே எழுதப்பட்டதுமல்ல. பிரமா அதுகளைச் சிலரிஷிகளுக்குப் படிப்பித்ததென்றும், அநேகங்காலம் அதுகள் பாரம்பரைமுறையாய்ப் படிப்பிக்கப்பட்டு வந்தபின்பு பலரிஷிகளால் எழுதப்பட்டு வேதவியாசனாலே சேர்க்கப்பட்டதென்றுஞ் சொல்லுகிறார்கள். பிராமணர் சாதனை இதுக்கு அத்தாட்சியா யிருக்கிறதொழிய வேறொன்றுமில்லை. ஆனாலவர்கள் சொல்வதைத்தானே நம்பவிடமில்லை. ஏனெனில் கனமான காரியத்திலே வெறுஞ்சாதனை போதாது. அதுக்குத்தக்க சாட்சியத்தாட்சி வேண்டாமோ? அந்தச்சாதனை எப்போ, எப்படி துவக்கினதென்றும், துவக்கத்திலே ஒருத்தனாலேமாத்திர முண்டாயிற்றோ, அநேகராலே உண்டாயிற்றோவென்றும் அவர்கள் கொடுத்த உருசு சாட்சி யத்தாட்சி யென்னவென்றுந் தெளிய வேண்டாமோ? அது தெளியாதபோது அந்தச்சாதனையை நம்பவிடமில்லை. இதிலே வெறுஞ்சாதனை செல்லாது.

மீளவுஞ் சதுர்வேதங்கள் பிரமாவின் நாலுமுகங்களினின்று புறப்பட்டதென்று அநேகர் சொல்லுகிறார்கள். இதுவும் வெறுஞ்சாதனையொழிய உருசுவினால் மெய்ப்பிக்கப்பட்டதல்ல. அன்றியு முந்திக்காட்டின சாதனையோடே இது ஒவ்வாது. மேலும் பெரும் புத்தகங்கள் முகத்தினின்று புறப்படுகிறது எப்படிப்பட்ட பிதற்றலான கதையாம். அன்றியும் பூர்வத்திலே பிரமா பஞ்சமுகனா யிருந்தானென்று இந்துமதஸ்தர் சொல்லுகிறார்களே, ஐந்து வேதம் புறப்படா திருந்ததென்ன? அவன் பார்வதியை மோகித்ததைப்பற்றிச் சிவன் அவனுடைய முகங்களிலொன்றைக் கிள்ளினதற்குப்பின் மீதியான நாலுமுகங்களினின்று வேதங்கள் புறப்பட்டதென்பார்களாக்கும். அப்படியானால் வேதங்கள் ஆதியிலுண்டானதல்ல, மேலும் பிரமா அந்தத் தப்பிதத்தைச் செய்ததைப்பற்றியுந் தன்சொந்த மகளைத் தனக்குப் பெண்சாதியாகக் கட்டிக்கொண்டதைப்பற்றியும் இந்துமதஸ்தர் அவனைப் பிறக்கணித்துக் கோவிலும் ஆராதனைவணக்கமு மில்லாமல் விட்டதுபோலே அவன் முகங்களினின்று புறப்பட்டதாகச் சொல்லப்படுகிற வேதங்களையும் பிறக்கணித்துத் தள்ளவேண்டாமோ? அப்படிச்செய்வதுநியாயந்தானென்று பின்னாலே மேன்மேலும் விளங்கும். ஆயினும் அதுகளைச் சரியாய் விசாரிப்போமாக.

எசுர்வேதம் வெள்ளை (சுக்ல) எசுர்வேதமென்றுங் கரும் (கிருஷ்ண) எசுர்வேதமென்றும் இரண்டு பிரிவாம். கரும் எசுர்வேதம் தைத்திரியம் எனவும் படுகின்றது. அந்தப்பேரானது அந்த வேதவகுப்பைப் படிப்பித்த தித்திரிமுனியைப்பற்றி அதுக்குக் கொடுக்கப்பட்டதென்று சிலர் சொல்லுகிறார்கள். மற்றநேகர் அதற்குச்சொல்லுகிற காரணமென்னவெனில், வைசம்பாயனன் கரும் எசுர்வேதத்தை யாஞ்ஞவற்கியனென்னுந் தன் சீஷனுக்குப் படிப்பித்திருந்தான். ஆனால் இவன் வைசம்பாயனன் தெரியாமற்செய்த கொலையென்கிற பாவதோஷத்தைத் தன்பேரிற் சுமந்துகொள்ள மாட்டேனென்றதினால் தான் கற்றுக்கொண்டதைக் கண்டிப்புள்ள ரூபமாய்க் கக்கிப்போடக் கட்டாயப்பட்டான். அப்போது வைசம்பாயனன் கட்டளையிட்டபடி அவனுடைய மற்றச்சீஷாக்கள் ஓர்வகைக் கவுதாரியாகிய தித்திரிப்பறவையின் ரூபமெடுத்து யாஞ்ஞவற்கியன் கக்கினவேதத்தைப் பக்ஷித்துக்கொண்டு அதைப்பின்னும் வெளிப்படுத்தினார்கள். அதினால் கரும் எசுர்வேதம் தைத்திரியம் எனனப்பட்டதாம். இப்படிப்பட்ட கதைகளை உண்டுபண்ணினவர்களை நம்பி வேதங்கள் தேவ வாக்கென்று விசுவசிக்கத்தகுமோ?

சதுர்வேதங்களில் முதல் மூன்றுவேதங்கள் வெகுகாலந்துவக்கி வழங்குகிறதென்பது உண்மையானாலும் பிராமணர் சொல்லுகிற பெருந்தொகை வருஷப்பழமை அதுகளுக்கில்லையென்பதுறுதி. அதுகள் கிரிஸ்து பிறப்பதற்கு ஏறக்குறைய 1,300 வருஷத்துக்குமுன்னே உண்டாயிற்றென்று பல சஸ்திரிகள் எண்ணுகிறார்கள். அப்போதுமுதலிதுவரைக்கும் ஏறக்குறைய மூவாயிரத்து ஒருநூற்று எண்பது வருஷமாம். மீளவும் இவர்கள் அதர்வணவேதத்தைப் பரிசோதித்துவருகையில் அதுக்கும் மற்ற மூன்றுவேதங்களுக்கு முண்டான பல வித்தியாசங்களையும் இவைமுதலிய சில விசேஷங்களையும்பற்றி அதர்வணம் அதுகளுக்குப் பிந்தின காலங்களிலே உண்டாக்கப்பட்டதென்று நிச்சயிக்கிறார்கள்.

அதர்வணவேதத்தில் நரபலிகளுக்கும் பில்லி சூனிய முதலிய அக்கிரமங்களுக்கும் மந்திர தந்திர சடங்குகள் அடங்கியிருக்கின்றமையால் அது சதுர்வேதத்தார்களுக்குமுதலாய் வெட்கமாயிற்று. அதைப்பற்றிச் சிலகாலங்களுக்குமுந்திப் பிராமணர்முதலிய இந்துமதஸ்தர் மற்றவேதங்களைவிட அதை மகாபத்திரமாய் மறைத்து அது எங்குங்காணோமென்பார்கள். மேலும் அயக்கிரீவன் என்கிற இராக்ஷதன் பூர்வத்தில் சதுர்வேதங்களை அபகரித்துக்கொண்டு அதுகளை விழுங்கிக்கொண்டிருக்கையில் விஷ்ணு மச்சாவதாரஞ்செய்து அவனுடைய வயிற்றைப் பீறி அதுகளை யெடுக்கிறதுக்குள்ளே அதர்வணவேதம் அவனாலே சீரணிக்கப்பட்டதென்று சிலர் சொல்லியிருந்தார்கள். ஆயினும் இங்கிலீஷ்காரர் முதலிய சனத்தாரிற் சில கல்விமான்கள் பட்ட பிரயாசங்களினால் அந்தவேதத்தில் ஒரு பெரும் பங்காவது அகப்பட்டது. அது முழுமையும் அகப்பட்டிருக்குமோ தெரியாது.

அந்தந்தவேதம் மிகவும் வேற்றுமையான இரண்டுவகுப்பாம். சங்கிதை அல்லது மந்திரங்களென்னப்பட்ட முதல் வகுப்பேதென்றால், அக்காலத்தில் இந்துமதஸ்தர்களால் ஆராதிக்கப்பட்ட சில தேவர்களுக்கு ஸ்துதி அல்லது விண்ணப்பமான பாட்டுகளாம். அந்தந்த பாட்டின் முடிவிலே அதை யுண்டாக்கின புலவன் பேர் குறித்திருக்கின்றது. அப்படியிருக்க வேதங்கள் பிரமாவின் வாக்கியமல்லவென்றும் அவனாலே படிப்பிக்கப்பட்டதல்லவென்றும் அவன் முகங்களினின்று புறப்பட்டதல்லவென்றும் இதுவே மறுக்கப்படாத அத்தாட்சி. ஏனெனில் அது வேதங்களிலேதானே அடங்கியிருக்கின்றது. மேலுஞ் சங்கிதை என்னப்படுகிற பாட்டுகள் வேதங்களின் பிரதானபங்காம். பிராமண மென்னப்படுகிற மற்ற வகுப்பு அவ்வேதத்துக்கடுத்தயாகம், காணிக்கைமுதலிய சடங்குகளையும் மற்றச் சிலகற்பனைகளையும் வெளிப்படுத்தும். அதற்குப்பின் சில உபநிஷதம் சேருகிறதுண்டு. அதுகளில் அவ்வேதத்துக்கடுத்த சில போதனைகளுந் தர்க்க நியாயங்களும் அடங்கியிருக்கின்றது.

நாலுவேதங்களிலும் பல தேவர்கள் கொண்டாடப்பட்டிருக்கின்றது. விசேஷமாய் அக்கினி, வாயு, ஆகாசம், மருத்துகள், வருணம் அல்லது வருணன், சலம், இந்திரன், சூரியன், சந்திரன், பூமிமுதலிய வஸ்துக்கள் அதுகளிலே வணங்கப்படுகிறதாம். பின்னும் பன்னிரண்டு ஆதித்தர், இரண்டு அச்சுவினிகள், பதினொரு உருத்திரர், எட்டுவசுக்கள் சில ராஜாக்கள் முதலானவர்களு மிகவும் பாராட்டப்பட்டிருக்கிறார்கள். ஆயினும் அவர்களில் மேற்சொல்லிய வருணனுக்கும் இந்திரனுக்கும் இப்போது சமுத்திரத்தேவனாகப் பாராட்டப்படுகிற வருணனென்பவனுக்கும் தேவர்களின் ராசாவாக எண்ணப்படுகிற தேவேந்திரனுக்கும் மிகவும் வித்தியாசமுண்டு.

அக்காலத்திலே இந்துமதஸ்தர்களுக்குத் தேவாலயங்களும் மனுஷரூபமான விக்கிரகங்களு மிருந்ததுகாணோம். அப்போது பஞ்சபூதியங்களைப் பிரதானமாய் வணங்குவார்கள். ஆதலால் அப்பு தான் அவர்களாலே வருணமென்னவும் ஆகாயம் இந்திரனென்னவும்பட்டு வணங்கப்பட்டதென்று சொல்லத்தகும்.

பூர்வத்தில் இந்துமதஸ்தர் பஞ்சபூதியங்களை வணங்கிவந்தார்களென்பதற்கு அத்தாட்சியாக இன்னம் அ

வர்களுடைய முக்கியமான வேதஸ்தலங்களில் அதுகளின் குறிப்பு அல்லது நினைப்பு காப்பாற்றப்பட்டதாமே. அதைக்குறித்து அகராதி முதலிய நூற்களிற் சொல்லியிருக்கிறதாவது: இலிங்கம் ஐந்து. பிருதிவிலிங்கம் காஞ்சியில்; அப்புவிலிங்கம் திருவானைக்காவில்; வாயுவிலிங்கம் சீகாளத்தியில்; ஆகாயவிலிங்கஞ் சிதம்பரத்தில்; இவையே பஞ்சபூதவடிவங்களான பிரதான பஞ்சவிலிங்கம் என்பதேயாம். (இன்னும்வரும்.)

—o—

சந்தியாவந்தனம்.

(31-வது பக்கத் தொடர்ச்சி.)

உத்திஷ்டந்து &c. இதன்கருத்து.—பூமிபாரகங்களான பூதபிசாசுகளின் தொந்தரவு இல்லா திருப்பதற்காக சந்தியாவந்தனம் செய்கிறேன்; அவைகள் விலகிப் போகக்கடவது.

ஆபோ ஹிஷ்டா&c. இதன்கருத்து.—ஓஜலங்களே! எங்களுக்குசவுக்கியத்தைக் கொடுக்கப்பட்டவர்கள் நீங்களல்லவா? அப்பேர்க்கொத்தநீங்கள் எங்களுக்கு அன்னத்தைக் கொடுத்தருளுங்கள். (அன்னமேனெனின்) எங்கள் இந்திரியங்களின் உறுதிக்காக மிகுந்தசுகத்தைக்கொடுக்கும் உங்கள்ரசத்தை இகத்தில் மிகவும் தயவுசெய்து, பிரியமுள்ள மாதாக்கள் தங்கள் குழந்தைகளுக்கு பால்கொடுத்துக் காப்பாற்றுவதுபோல எங்களைக் காப்பாற்றுங்கள். எந்தரசத்தை நீங்கள் அடைந்து சந்தோஷிக்கிறீர்களோ அந்தரசத்துக்காகவே உங்களைசீக்கிரத்தில் அடைகிறோம். ஓநீர்களே! உங்கள் ரசவிசேஷத்தினால் உண்டான எங்களுக்கு சந்ததிவிருத்தியை ஈந்தருளுங்கள்.

மாலை காலை ஜலபிராசனமந்திரம்.

అగ్నిశ్చమామన్యుశ్చ మన్యుపతయశ్చ మన్యుకృతేభ్యః పాపేభ్యో రక్షన్తామ్, యదహ్నాపాప మకార్షంమనసావాచా హస్తాభ్యాం పద్భ్యాముదరేణశిశ్నా అహస్తదవలుమ్పతు, యత్కిఞ్చదురితంమయి,ఇదమహం మామమృతయోనౌ సత్యేజ్యోతిషి జుహోమి, స్వాహా.

సూర్యశ్చమామన్యుశ్చ మన్యుపతయశ్చ మన్యుకృతేభ్యః పాపేభ్యో రక్షన్తామ్, యద్రాత్ర్యాపాప మకార్షం మనసావాచా హస్తాభ్యాం పద్భ్యాముదరేణశిశ్నా, రాత్రిస్తదవలుమ్పతు, యత్కిఞ్చదురితంమయి, ఇదమహంమా మమృతయోనౌ సూర్యేజ్యోతిషి జుహోమి, స్వాహా.

அக்கினிஸ்ச மாமன்யுஸ்ச மன்யுபதயஸ்ச மன்யுகுருதேப்யஹ பாபேப்பியோ ரக்ஷந்தாம் யதஹ்ந பாபமகார்ஷம் மனஸா வாசா ஹஸ்தாப்யாம் பதப்பியா முதரேண ஸிஸ்னா அஹஸ்ததவலும்பது, யத்கிஞ்ச துரிதம்மயி, இதமஹம் மா மம்ருதயோனௌ சத்யே ஜோதிஷி, ஜுஹோமிசுவாஹா.

சூரியஸ்ச மாமன்யுஸ்ச மன்யுபதயஸ்ச மன்யு குருதேப்யஹ, பாபேப்பியோ ரக்ஷந்தாம் யத்ராத்ரியா பாபமகார்ஷம் மனஸா வாசா ஹஸ்தாப்பியாம் பத்ப்பியா முதரேண ஸிஸ்னா ராத்ரி ஸ்ததவலும்பது யத்கிஞ்ச துரிதம் மயி, இதமஹம் மாமம்ருதயோனௌ சூர்யே ஜோதிஷி, ஜுஹோமி சுவாஹா.

கருத்து.—நெருப்பும், சினமும், சினத்திற்குக் காரணமாகிய வைராக்கிய பிடிவாதமும், கோபத்தினாலுண்டான பாவங்களினின்று என்னை இரட்சிக்க வேண்டும். சென்ற பகலில் மனம் வாக்கு கை பாதம் உதிரம் குய்யம் இவைகளினால் நான்செய்த பாவங்களை பகல் காலத்துஅதிதேவதைஅப்பாவமுழுவதையும் போக்கடிக்க வேண்டும். இவையன்றியென்னை அறியாது நான் செய்த பாவங்களையும் மன்னிப்பவரான சூரியப்பிரகாசம் பொருந்தியவரை ஆராதிக்கிறேனென்று சொல்லி ஜலத்தை பானஞ்செய்கிறேன். [மாலை சந்தியாவந்தனத்தில் மாலை என்னும் மொழியைமட்டும் காலை என்னும் இடத்தில் சேர்த்துக்கொள்ள மாலை ஜெபமாகும்.]

மத்தியான ஜலபிராசனமந்திரம்.

ఆపఃపునన్తుపృథివీం, పృథివీపూతా పునాతుమాం పునన్తుబ్రహ్మణస్పతిర్ బ్రహ్మపూతా; పునాతుమాం యదుచ్ఛిష్టమభోజ్యం యద్వాదుశ్చరితంమమ, సర్వంపునన్తు మామాపో సతాంచ ప్రతిగ్రహగ్ స్వాహా.

ஆபஃ புனந்து ப்ருதவீம் ப்ருதவீபூதா புனாதுமாம் புனந்து ப்ராம்ஹண ஸ்பதிர் ப்ராம்ஹபூதா புனாதுமாம்யதுச்சிஷ்டமபோஜ்யம் யத்வாதுஸ்சரிதம் மம சர்வம்புனந்து மாமாபோசதாம்ச ப்ரதிக்ரஹக் ஸ்வாஹா.

கருத்து.—மழை ஜலத்தினால் சுத்தியான பூமியே என்னை சுத்திசெய். சமஸ்த வேதங்களில் புகழ்ந்து பேசப்பட்ட கடவுளால் சுத்திசெய்யலான ஜலங்கள் என்னைசுத்திசெய்யவேண்டும். ஒருவர் உண்டு மீந்த போஜனத்தையும், உரோமம் புழு முதலியன விழுந்து அசுசியடைந்த போஜனத்தையும் உண்பதினால் உண்டாகும் குற்றத்தையும், முக்கருணங்களால் செய்யப்பட்ட பாவத்தையும், துஷ்ட சகவாசத்தினால் உண்டான குற்றத்தையும் நிராகரித்து ஜலம் என்னை சுத்திசெய்யக்கடவது என்று ஜபித்து சுவாஹா என்று ஜலபானஞ்செய்து என்பாவமுழுவதையும் நாசமாக்கிவிட்டேன் என்று ஜலத்தை கையிலெடுத்து கீழே விடவேண்டும்.

ததிக்ராவ்ண்ணஹ என்னும் யஜுர்மார்ஜன மந்திரம்.

దధిక్రావ్ణ్ణో అకారిషం, జిష్ణోరశ్వస్యవాజినః, సురభినోముఖాకరత్ప్రణ ఆయూగ్ షి తారిషత్. ఆపోహిష్ఠేత్యాది.

ததிக்ராவ்ண்ணோ அகாரிஷம் ஜிஷ்ணோரஸ்வஸ்ய வாஜினஹ சுரபினோ முகாகரத்ப்ரண ஆயூக் ஷிதாரிஷத். ஆபோ ஹிஷ்டேத்யாதி &c.,

கருத்து.—ஜெயசீலரும்,சருவவியாபகரும், அடியார்களை காப்பாற்றுவதில் அதிதுரிதமுள்ளவருமான சைதன்னியனை நான் துதிக்கிறேன். சுத்தமான மனதும், சுத்தமான வாக்கும் உடையவனே கடவுளை துதிக்க பாத்திரன். ஆகையால், பகவானே! அப்பேர்கொத்த யோக்கியதையை எங்களுக்கு ஈந்தருள்வீராக.

சந்தியாவந்தனம் சம்ஸ்கிருத பாஷையில் எழுதியிருப்பதினாலும், அது அநேக வருஷங்களுக்குமுன் உண்டானதினாலும், பிராமணர் தவிர மற்ற ஜாதியார் அதனை உச்சரிக்கக்கூடாதென்பதினாலுமே அதனிடத்தில் மதிப்பு உண்டாயிருக்கிறதேயன்றி மற்றப்படி அதில் விசேஷமொன்றுங்காணோம்.

பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற மூவரும் கடவுளல்லரென்றும், பூதங்களென்றும், அப்பூதங்களையே கடவுளாக அலங்கரித்து ஆராதிக்கிறார்களென்றும் இதற்குமுன் பெயர்த்துப் பெயர்த்துக் காட்டினோம். அப்பூதங்களின் பரியாய நாமங்களான "கோவிந்தாகிஷ்ணு கேசவா" என்ற நாமவரிசைகளை காலைமாலை இருபொழுதும் வரட்டுத்தவளையைப்போல் கத்துவதில் என்னபிரயோசனம். அந்நாமங்கள் குறிக்கும் பூதங்களா பிராமணருக்கு சாயுச்சியத்தை அளிக்கத்தக்கது. அப்பிரத்தியேக பூதங்களில் மனம் புத்தி முதலிய தத்துவங்கள் சிறிதெனினுங் காணப்படாமையால் அவை இவர்கள் வேண்டுகோளிற்கு செவிசாய்ப்பதில்லை ஆகையால், சந்தியாவந்தனம் அப்பிரயோஜன கோட்பாடாயிற்று.

பிராமணர் பஞ்ச பூதங்களையே வணங்குகிறார்களென்பதற்கு சந்தியாவந்தனமே சாலுங்கரி. நிலம் நீர் தீ சூரியன் ஆகியஇவற்றை நோக்கி வேண்டிக்கொண்ட பிராமணரில் எவரேனும் அவற்றால் பிரயோஜனத்தை அடைந்தார்களா? பிரயோஜனத்தை யாவரும் அடைந்துகொண்டிருக்கிறார்களெனில், அப்பிரயோஜனங்கள்உண்டாயிருப்பது பிராமணரின் சந்தியாவந்தனத்தினாலல்ல; அவ்வவைகள் அவ்வப் பிரயோஜனங்களை அளித்துக்கொண்டிருப்பது அவ்வவற்றின் இயல்பாயிருப்பதால், பிராமணர் தங்கள் சந்தியாவந்தனத்தினால் அப்பூதங்கள் பிரயோஜனங்களைக் கொடுத்துக்கொண்டிருக்கிறதென்று எண்ணினஎண்ணம் பழுதடைத்து. அமெரிகா ஆஸ்திரேலியா இங்கிலாந்து முதலிய விடங்களில் பிராமணருமில்லை. பிராமண சந்தியாவந்தனமுமில்லையாதலால், அவ்விடங்களில் பூதங்கள் பிரயோஜனப்படுகிறதில்லையோ? அதாவது:—நெருப்பு சுடாமலும்,தண்ணீர் அசுத்தத்தைப்போக்காமலும்,காற்றுவீசாமலுமா இருக்கிறது? சந்தியாவந்தனம் செய்யினும் செய்யாவிடினும் அதனால் உண்டாகும் பிரயோசனம் உண்டாய்க்கொண்டேயிருக்கிறது. கோழி கூவுவதினால்தானா பொழுதுவிடிகிறது.

(இன்னும்வரும்.)

M. M.

கடிதம்.

ஐயா, பத்திராதிபரவர்களே,

சென்னையில் நகைபூண்டிருக்கிறசிறுவர்கள் அடிக்கடி களவடமாய்க் கொண்டுபோகப்பட்டுக் கொலைசெய்யப்படுகிறார்கள். ஒரு சிறுவனைப் பட்டணத்திலிருந்து அடுத்தபெரம்பூருக்குக் கொண்டுபோய்க் கொலைசெய்யத்துணிந்த ஒருபாதகன் அகப்

பட்டுச்சைதாப்பேட்டையில் இன்னும் விசாரணை நடந்து கொண்டிருக்கும்போதே, தூர்த்தனெவனோ ஒருவாரத்திற்கு முன்னே 9 வயதுள்ள ஒருசிறுவனைப் பட்டணத்திலிருந்து அடுத்த திருவொற்றியூருக்குச் சமீபத்தில் கொண்டுபோய்க் கொலைசெய்து குளத்திலெறிந்துவிட்டான். நெருங்கின ஒரு பாத்தியஸ்தன்பேரில் அனுமானமுண்டாயிருக்கிறதாகக்கேள்வி. இவ்வாறு பலமுறை கொலை நடப்பதை யறிந்திருந்தும் நம்மவர்கள் குழந்தைகளுக்குப் பூணாரம் பூட்டுவது என்னமதிமோசமோ!

எனக்கு நெருங்கிய பந்துவாகிய ஒருவர் குழந்தையாயிருந்தபோது நகையோடு காணாமற்போய் மூன்றுநாளைக்குப்பின்பு புரசைபாக்கத்தில் அகப்பட்டனர். அவருடைய குழந்தைக்கு ஆபரணமிட்டு விளையாடவிட்டிருந்ததை யான்கண்டு, அனுபவமிருந்தும் இப்படிச்செய்வது சரியல்லவென்று நான கண்டித்ததற்கு, பிராரத்துவமிருந்தால் விட்டுவிடுமா? நம்மாலென்ன ஆகிறது? நடக்கிறதுதானே நடக்குமென்று சமாதானஞ்சொல்லினர். இப்படிப்பட்டவர் பெட்டிக்குச் சாவியிட்டுப்பூட்டாமலும், இராக்காலத்தில் தெருக்கதவுக்குத் தாழக்கோல்மாட்டாமலுமல்லவோ யிருக்கவேண்டும்! அவரோடு நான் என்ன பேசலாம்! அவருடைய விவேகத்திற்கும் தெய்வ நம்பிக்கைக்கும் ஆச்சரியப்பட்டு வந்துவிட்டேன். அப்படியே, வெகுகாலஞ்சென்றாலும் மறப்பதற்கரிதாகியபீபில்ஸ்பார்க்கு அக்கினித்துன்பவிஷயத்திலே, சந்தைக்குப் போகாதிருந்த சிலர் "போகலாமென்று காலமேயெண்ணியிருந்தேன், சாயங்காலம் ஈஸ்வரன் அந்த புத்திகொடாமையால் போகாமல் தப்பித்துக்கொண்டேன்" என்று ஈஸ்வரன்பேரில் பாரத்தைப் போட்டுவிட்டார்கள்; போய் உதைபட்டு மிதிபட்டுத் தப்பித்துக்கொண்டு வந்து விட்டவர்களும் ஈஸ்வரச்செயலால் பிழைத்தோமென்றார்கள்; சுட்டெரிந்து மாண்டவர்களைப்பற்றி ஈஸ்வரசங்கற்பமப்படியாயிருந்தது, நாமென்னசெய்யலாமென்றார்கள். அப்படிக்கானால், உபகாரமுதலிய நற்செயல்களையும், கொலை களவுமுதலிய தீச்செயல்களையும் நடத்துவிப்பவன் அவனேயாகில், மனிதனுடையமுயற்சியொன்றும்வேண்டுவதில்லையேயெனின், கடவுள் கொடுப்பான், ஊட்டுவானோ என்கிறார்கள்; பின்னுங் கொஞ்சம் நெட்டிப்பேசுவோமாகில், அந்தக் காரியங்களைச்செய்யும்படிக்கு எண்ணங்கொடுத்தவன் அவன்தானென்கிறார்கள். அத்வைதமுதலிய பல இந்து சமயங்கள் பற்பலவாகப் போதிப்பதினால் இப்படிப் பேசுவதற்கிடமுண்டாயிருக்கிறது. இவற்றையெல்லாம் யோசிக்குமிடத்து, எதற்கும் மனிதன் பொறுப்பாகாமையால், அவனைப்பிடித்த அரிஷ்டம் விட்டேபோகிறது. இவ்வாறுஅசப்பியவார்த்தைகளைப்பேசாமல்,பூர்வம் புத்திவிசாலத்தினால் விர்த்தியடைந்திருந்த தேசத்தார் பின்பு புத்திகுறைவினால் க்ஷீணித்துப்போனதையும், இதற்கு மாறாயிருந்த தேசத்தார் இப்போது புத்தி விசேஷத்தால் மேன்மையடைந்திருப்பதையும் பார்க்கிறோமாதலால், விவேகத்துடன் நடப்பதே விசேஷம்.

முத்தியாலுபேட்டையில் சில வருஷங்களுக்கு முன்னே ஒரு தனிக மகமதியர்வீட்டில் ஒரு பிரயோசனம் நடந்தபோது, ஆபரணங்களைப்பூட்டித் தாதியினிடம் ஒப்பித்திருந்த அவ்வீட்டுக்குழந்தையை அவள் கொண்டுபோய்க் கொலைசெய்துவிட்டதை அநேகர் அறிந்தேயிருக்கிறார்கள். பாதுகாக்கப்பட்ட குழந்தையின் கதியே இப்படிக்கானால், பாதுகாக்கப்படாத குழந்தைகளின் கதியென்னமாகுமென்று நம்மவர்கள் யோசிப்பதில்லை. ஆயினும், ஊரில் ஏதாவதொரு குழந்தைக்குச் சங்கடம் நேர்ந்ததைப்பார்த்த மாத்திரத்திலும்கேட்டமாத்திரத்திலும்சமீபத்திலுள்ளவர்கள் தங்கள்குழந்தைகளின்மேலிருக்கிற ஆபரணங்களைக்கழற்றிப்போடுகிறார்கள்; ஆனால்அந்தக்கொதிப்பு அடங்கிவரவர,பழையமூடநம்பிக்கைமேற்கொள்ளக்கொள்ள, சிற்சில நிமித்தத்தினால் மறுபடி பூண்பூட்டிவிடுகிறார்கள். தங்கள் மக்கள் ஏழைப்பிள்ளைகளோடு எண்ணிக்கை யுறுவார்களென்கிற நிமித்தமே பெரிதாயிருக்குமென்று நினைக்கிறேன். இதனாலே விவேகக்குறைவு வெளியாகிறதேயல்லாமல் வேறொன்றுமில்லை. ஆதலால், தாங்களும் மற்றப் பத்திராதிபர்களும் தங்கள் தங்கள் பத்திரிகைகளின் மூலமாய் இதுவிஷயத்தைப் பற்றி நமது தேசத்தவர்களுக்கு அடிக்கடி நினைப்பூட்டி, மதிமயங்காமலும், "வேண்டுதல் வேண்டாமையிலது" ஆகிய பொருளின்பேரில் பழிபோடாமலுமிருக்கும்படி உபதேசித்து வருவீர்களென்று கோருகின்றனன்.

ஓர் இந்து.

வர்த்தமானசங்கிரகம்.

தூங்குமூஞ்சி வண்டிக்காரர்கள்.—நாட்டுப்புறத்து வண்டிக்காரர்கள் இராக்காலத்தில் தூங்கிக்கொண்டு, எருதுகளைத் தாமாய்ச்செல்லவிடுகிறார்கள்; இது வெகு கெட்டவழக்கம். சில நாளுக்குமுன்னே பெங்களூரைச்சேர்ந்த கிருஷ்ணராஜபுரத்துக்கருகே வண்டிக்காரன் நல்ல தூக்கம் தூங்கிவிட, ரெயில்வே லயனுக்குக் குறுக்காகப்போன எருதுகள் புல்லைத்தின்னலாமென்கிற அபேட்சையினாலோ வழி சுளுவாயிருக்குமென்கிற எண்ணத்தினாலோ இருப்புப்பாதைவழியே திரும்பிவிட்டன. காலை - 5 - மணிக்கு வந்துசேரவேண்டிய நீராவிவண்டித்தொடர் தூரத்தில் வருகையில், அதிருஷ்டவசத்தால் ஒரு காவற்காரன் அந்த மாட்டுவண்டியைப் புறம்பே ஒதுக்கி மடக்கி வண்டித்தொடருக்கு வழி விட்டுவிட்டான். பிராணத்துக்கு அபாய முண்டுபண்ணுவதென்னுங் குற்றத்திற்காக ஸ்டேவார்ட்டு துரையானவர் வண்டிக்காரனபேரில் போலீசு சம்மன் செய்திருக்கிறார்.

சீனம்.

நேபால் என்னும் நீராவிக்கப்பலும் ஒரு நீராவி சீனக்கப்பலுந்தாக்கியது.—நேபால் கப்பல் போய்க்கொண்டிருக்கையில் விடியற்காலமே மூடுபனி மிகுதியால் இருள் சூழ்ந்திருந்தது பற்றிக் குழலூதி எச்சரிக்கை செய்துகொண்டே போயிற்று. சீனக்கப்பல் நெருங்கிவந்தபோது அதின் குழலோசைகேட்டு, இரண்டு கப்பல்களும் மாறப் பிரயத்தனப்பட்டும், மிஞ்சிப் போனமையால் நேபால் கப்பல் மோதி சீனக்கப்பல் சேதப்பட்டு அதிக உயிர்ச்சேதமுண்டாயிற்று. நேபால் கப்பலிலிருந்தவர்கள் பலவித உபாயத்தால் சுமார் 190 பிராணனைக் காப்பாற்றினார்கள். முழுகிப் போனவர்கள் 50-க்கு மேல் 100-க்குள் இருக்குமென்பது உத்தேசம்.

ஹைதராபாதிலே பெண்டுகள் வைத்தியசாலை விசேஷப்பட்டுவருகிறது. ஆயினும், இந்தியாவிலே மற்றபாகங்களில் நாளுக்குநாள் நகர்ந்துவருகிற மூடஆசாரத்துக்குப் பீடமாய் மகமதியம் நிலைபெற்றிருக்கிற ஹைதராபாதிலே அநேகவருஷகாலம் பொறுமையோடுசெய்யப்பட்ட முயற்சியால் கோஷா ஸ்திரீகளின் அறைகளுக்குச் செல்ல இப்போது வகையுண்டாயிருக்கிறது. மிகுந்த ஏழைகளிலும் சிலர்மாத்திரம் ஆசுபத்திரிக்கு வருகிறார்கள். வரவர விர்த்திக்குவருமென்பதற் கையமில்லை.

செங்கற்பட்டு ஜில்லா மதராந்தகத்திலே விக்டோரியா ஜூபிலி சத்திரத்துக்கு 22உ காலமே அஸ்திவாரக்கல போடப்பட்டதென்று தந்தி சமாச்சாரத்தினால் தெரியவருகிறது.

பஞ்சாப் கவரன்மெண்டார் - பத்தியாலாவிலிருந்து பாட்டிண்டாவுக்கு இருப்புப்பாதை போடுவதற்காக அளவெடுக்கும்படி உத்தரவுசெய்திருக்கிறார்கள். நூறுமயல் நீளத்திற்கு பெரிய ஆறுகளாவது நீரோட்டங்களாவது இல்லாமையால் அந்த வேலைக்குத் தரை பக்குவமாயிருக்கிறது.

இம்பீரியல் சபையில் ஸ்தாபிக்கப்பட்ட மாதிரியை யனுசரித்து, பஞ்சாப் முழுவதும் சுமார் நானூறு சுதேச கனவான்களுக்கு மகாராணி ஜூபிலி உற்சவகாலத்தில் நல்லூழியத்திற்காகவும் ராஜவிஸ்வாசத்திற்காகவும் அத்தாட்சியாக அவ்விடத்திய லெப்டனண்டு கவர்னரவர்களுடைய கையெழுத்துடனே சர்ட்டிபைகேட்டுகள் கொடுக்கப்பட்டன.

அறிக்கை.

மதிராஸ் சிக்கியுலர்சோசைட்டி.

சென்னை லௌகிகசங்கம்.

—o—

வேப்பேரி சில்வர்ஸ்ரோட்டிலே சேக்கிரிட்டேரியவர்கள் கிரகத்தில், நிகழும் பிபர்வரி 27உ ஆதிவாரங்காலை (8) மணிக்கு, சங்கத்தின் மெம்பர்கள் மகாசபைகூடலாகும்.

தமிழ்சந்தாவிபரம்.

		Rs.	A.	P.
மாசம்	1-க்கு	0	4	0
ஷை	3-க்கு	0	10	0
ஷை	6-க்கு	1	2	0

முன்பணஞ்செலுத்தவேண்டும். சந்தாவோடுகூட, இந்தியாவிலும் பர்மாவிலுமுள்ள வெளியூரார் மாசமொன்றுக்கு ஒருஅணாவீதமும், சிலோனிலுள்ளவர்கள் வாரமொன்றுக்கு ஒரு அணா வீதம் ஆறுமாசத்திற்கு ரூ 1—10—0 மும் தபாற்செலவு சேர்த்தனுப்பவேண்டும். ஒரு வருஷத்திற்குப் பணமனுப்ப விரும்புகிறவர்கள் ஆறுமாசத்தொகைக்கு இரட்டிப்பு அனுப்பவேண்டும். தபாற்செல்வு குறைவுபடக் கோருகிறவர்கள் தெரிவித்தால், பத்திரிகைகள் இரண்டுவாரத்திற்கொருவிசை சேர்த்தனுப்பப்படும் பட்சத்தில், பாதியும், நான்குவாரத்துக்கொருவிசை சேர்த்தனுப்பப்படும்பட்சத்தில் முக்கால்பங்கும் தபாற்செலவு கூடிவரும்.

Printed and Published for the Proprietor at the
VURTHAMANATHARUNGINI PRESS, No. 174,
Davaraja Moodelly Street,—Madras.